மலர் : 10 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 1
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

**நவம்பர் 2009**

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஆண்டு சந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2009 நவம்பர்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## உனக்கு நன்மை செய்வேன்.

ஆதியாகமம் 32:9

கோயம்புத்தூர் – **ஆனைமலை** மலைவாழ் மக்கள் மத்தியில் **பாஸ்டர் ஜீவா** ஊழியம் செய்து, **தானா** என்ற கிராமத்தில் கிளை ஊழியம் நடத்தி வருகிறார். இந்த **ஓலை ஜெபவீடு** மாற்றப்பட்டு **புதிய நிலத்தில்** ஜெபவீடு கட்டப்பட்டு 2010ல் பிரதிஷ்டை செய்யப்பட கருத்தாய் ஜெபியுங்கள்.



# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

### Managing Director
### Letter Dated: 10.10.2009



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

**இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.**

இந்த பத்திரிக்கை உங்கள் கரங்களில் கிடைக்கும்பொழுது 9 ஜெபவீடுகள் பிரதிஷ்டை முடிந்திருக்குமென நம்புகிறேன்.

மேலும் TVGM சிறுவர் இல்ல பிரதிஷ்டையும் முடிந்திருக்குமென நம்புகிறேன்.

ஜெபவீடு, சிறுவர் இல்ல கட்டிடப் பணிக்கு தேவன் பயன்படுத்திய பாத்திரங்களான **பாஸ்டர் ஜோசப் ஜெபமணி, பாஸ்டர் விக்கி** ஆகியோருக்காக தேவனைத் துதிக்கிறேன். ஜெபித்த உங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

நிர்வாக அலுவலகத்தை கட்டி முடிக்கவும், **பாஸ்டர் மாற்கு லூாயிஸ்** அவர்கள் ஜெபித்து, உட்பிரவேசிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

**"கலிலேயா முகாம்"** மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. **பாஸ்டர் மாற்கு லூாயிஸை** தேவன் வல்லமையாக பயன்படுத்தினார்.

TVGM நிர்வாக அலுவலகத்தில் எனக்கு உதவியாக நன்கு படித்த அனுபவமுள்ள, தேவனால் அழைக்கப்பட்ட கர்த்தருடைய பிள்ளைகள் தேவைப்படுகிறார்கள். முக்கியமாக கம்பியூட்டர், போட்டோ ஷாப், அக்கவுண்ட்ஸ் மற்றும் நிர்வாக திறமையுள்ளவர்கள் தேவை. ஜெபியுங்கள்.

கர்த்தருக்குச் சித்தமானால், நானும் என் தகப்பனாரும் நவம்பர் 1 முதல் 5ம் தேதி வரை இலங்கை செல்லவும், பாஸ்டர் சுரேஷ் அவர்களுடன் இணைந்து **வவுனியா** செல்லவும் வாஞ்சித்து ஜெபித்து வருகிறோம்.

மேலும் தொடர்ந்து 3 வாரங்கள் **பாஸ்டர் எபி – இம்மானுவேல் கிறிஸ்தவ ஐக்கியம்** மூலம் யூ.கே. செல்லவும், TVGM ஐ நேசிக்கிற பிள்ளைகளை சந்தித்து ஜெபிக்கவும், ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளவும் வாஞ்சித்து ஜெபித்து வருகிறோம்.

விசேஷமாக கிறிஸ்மஸ் காலங்கள் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க ஜெபிக்கிறோம். வாழ்த்துகிறோம்! **தேவனுக்கே மகிமை!**

கிறிஸ்துவின் பணியில்,

ஸ்டீபன் கிறிஸ்டோபர்

வாக்குத்தத்த செய்தி

# உனக்கு நன்மை செய்வேன்.

ஆதியாகமம் 32 : 9

**2009** நவம்பர் மாத வாக்குத் தத்தத்திற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும் தேவஊழியரே, விசுவாசியே!

கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறது:

**ஆதி.32:9**

**உனக்கு நன்மை செய்வேன்**

**இயேசு நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார். அல்லேலுயா.**

**அப்.10:38** நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கு கிறவராயும் சுற்றித் திரிந்தார்.

**தேவன்தாமேஉங்களையும், உங்கள் பிள்ளைகளையும்,உங்கள் குடும்பத் தையும் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணி, உங்களை நன்மை செய்கிறவர்களாக மாற்றுவாராக.**

**நன்மை என்றால் என்ன?**

**மீகா 6:8** மனுஷனே, நன்மை இன்ன தென்று அவர் உனக்கு அறிவித்திருக் கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.

எந்தக் காரியத்திலும் நியாயம் செய்வதும், இரக்கம் காட்டுவதும், மனத்தாழ்மையாய் நடப்பதுமே நன்மையான காரியமாக உள்ளது.

**பிரதான நன்மை எது?**

யோவான் 1:46 நாத்தான்வேல் பிலிப்புவிடம்: **நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா** என்றான். அதற்குப் **பிலிப்பு: வந்து பார்** என்றான்.

இருவரும் வந்து பார்த்தபோது, அங்கு **'இயேசு'** நிற்கிறார்.

அப்படியானால் '**இயேசுவே**' நன்மையாக இருக்கிறார். உங்கள் வாழ்க்கையில் காண வேண்டிய முதல் நன்மை **'இயேசுவாக இருக்கட்டும்'**.

இயேசுவை வாழ்க்கையில் ஏற்றுக் கொள்வதே முதல் நன்மையாகும். அதற்கு ஒப்பாக, இந்த **நன்மையான இயேசுவை** மற்றவர்களுக்கு அறிமுகப் படுத்துங்கள்.

**3 யோவான் 11** நன்மை செய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்.

**இயேசு சொன்னார்: மத்தேயு 5 :44** உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.

**ஏசாயா 1:17** நன்மை செய்ய படியுங்கள்.

**யாருக்கு, எப்போது நன்மை செய்வது?**

நீதி.3:27 நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதை செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.

**நன்மை செய்வதிலும் ஒரு ஒழுங்கு முறை உள்ளது.**

**முதலாவது** உனக்கு திராணி யிருக்க வேண்டும்.

**இரண்டாவது** செய்யத்தக்க வர்களுக்கு செய்ய வேண்டும்.

இந்த இரண்டு காரியமும் மிக முக்கியமானதாகும்.

**கலா.6:9,10** நன்மை செய்கிறதில் தளர்ந்து போகாமல் இருப்போமோக; நாம் தளர்ந்து போகாமலிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்.

ஆகையால் நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார் களுக்கும், நன்மை செய்யக் கடவோம்.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே!

இயேசுவே நன்மையாக இருக்கிறார். ஆதலால் இயேசுவை ஏற்றுக் கொண்ட கர்த்தருடைய பிள்ளைகள் சத்துருவினால் வாழ்க்கையில் கஷ்டங்களை அனுப விப்பதை காணும்போது அப்படிப்பட்ட விசுவாச குடுமபத்தார்களுக்கு நன்மை செய்யக்கடவோம்.

**நன்மை செய்வதினால் பலன் என்ன?**

**ரோமர் 2:10** எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு **மகிமையும் கனமும் சமாதானமும்** உண்டாகும். **சங்.37:3** கர்த்தரை நம்பி நன்மை செய். அப்பொழுது **சங்.85:12** கர்த்தர் நன்மையானதைத் தருவார்.

ஏனெனில் தேவன் இந்த மாதத்தில் உங்களுக்கு விசேஷ வாக்குத்தத்தம் அளித்திருக்கிறார்.

**உனக்கு நன்மை செய்வேன்**

என்பதாகும்.

**சங்கீதம் 119:68** தேவரீர் நல்லவரும், நன்மை செய்கிறவருமாயிருக்கிறீர்;

**சங்கீதம் 103:5** நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்.

ஆதலால் **'உனக்கு நன்மை செய்வேன்'** என்ற தேவாதி தேவனைப் பிடித்துக் கொள்ளுங்கள்.

ஏனெனில் வேதம் கூறுகிறது. **சங்கீதம் 34:10** கர்த்தரை தேடுகிறவர் களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது.

இன்று எந்த நன்மையில், குறைவுபட்டுள்ளீர்கள்? ஒரு முறை முழங்காலில் நின்று, தேவனுடைய சமூகத்தில் சிந்தித்துப் பாருங்கள்.

வியாபாரத்தில் நஷ்டமா? முன்னேற்றமில்லையா?பதவி இழப்பா? அல்லது உயர்வு இல்லையா? வேலையில்லாத் திண்டாட்டமா? அல்லது படிப்புகேற்ற வேலை இல்லையா? கடன் பிரச்சனையா? வீடு கட்ட முடியாமல் உள்ளதா? அல்லது பாதியில் நின்று கொண்டிருக்கிறதா? மகனால் பிரச்சனையா? அல்லது மகளால் பிரச்சனையா? எதுவாகவும் இருக்கட்டுமே? ஒரு முறை தேவனுடைய சமூகத்திற்கு வாருங்கள் **"உனக்கு நன்மை செய்வேன்"** என்று வாக்களித்த தேவாதி தேவனைப் பிடித்துக் கொள்ளுங்கள்.

விசேஷமாக **நீதி 18:22** மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்.

ஆதலால், மனைவியை கண்டடைய வில்லையே என ஏங்கிக் கொண்டி ருக்கும் வாலிபரே, தனி மனுஷனே!

**உனக்கு நன்மை செய்வேன்**

என தேவன் வாக்களிக்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை பிடித்துக் கொள்ளுங்கள்.

**நீதி 31:12** குணசாலியான ஸ்திரி உயிரோடிக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மை யையே செய்கிறாள்.

ஆதலால் இந்த மாதத்தில் அல்லது வருடத்தில் குணசாலியான ஸ்திரியை கர்த்தர் உங்களுக்கு கட்டளையிட்டு, உங்கள் குடும்பத்தை கர்த்தர் கட்டுவாராக. ஆமென்.

விசுவாசிப்போம், ஜெபிப்போம், துதிப்போம், பெற்றுக் கொள்வோம்.

**பின்வருமாறு பாடப் போகிறீர்கள்.** சங்கீதம் 13:6 கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் பாடுவேன்.

**பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.**

**சங்கீதம் 23:3** என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். மீண்டும் மீண்டுமாக அறிக்கை செய்யுங்கள்.

**பக்தன் பாடுகிறார்,**

*"ஜீவனுள்ள நாட்களெல்லாம்*
*கிருபை என்னைத் தொடரும்"*
*சிங்கக்குட்டிகள் பட்டினி கிடக்கும்*
*ஆண்டவரைத் தேடுவோருக்கு*
*குறைவில்லையே".*

பாடுங்கள் பாடிக் கொண்டே இருங்கள்.

இன்றையை சூழ்நிலையை பார்க்கும் பொழுது எல்லாருமே உனக்கு தீமை செய்வது போல் தெரிகிறது ஆனால் வேதம் சொல்லுகிறது,

**ரோமர் 13:4** உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான், நீ தீமை செய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்க வில்லை; தீமை செய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயி ருக்கிறானே.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, தாயாரே, தகப்பனாரே, தேவ ஊழியரே, ஊழியக்காரியே

'அவன் விருதாவாய் பட்டயத்தை பிடித்திருக்கவில்லை, உனக்கு விரோதமாக இருக்கிறார்களே என அங்களாய்கிறீர்களா? பயம் வேண்டாம்' உங்களுக்கு விரோதமாய் அல்ல, தீமை செய்கிறவன் மேல் தேவ கோபாக்கினை வரும்படி, அவன் நீதியை செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறான்.

**ரோமர் 8:28** தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக் கேதுவாகவே நடக்கிறது.

யோசேப்பு கூறுவதுபோல நீங்களும் கூறப் போகிறீர்கள்.

**ஆதி 50:20** நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்.

**எபிரேயர் 13:16** நன்மை செய்யவும், தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.

**யாக்கோபு 4:17** ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.

ஆதலால் என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே!

நம்மால் இயன்ற மட்டும் நன்மை செய்வோம், செய்யத்தக்கவர் களுக்கு செய்வோம். விசேஷமாக விசுவாசக் குடும்பத்தாருக்கு செய்வோம்.

**மனுஷன் எதை விதைக்கிறானே அதையே அறுப்பான்.**

ஏனெனில் **உனக்கு நன்மை செய்வேன்** என தேவன் வாக்களித்துள்ளார். விசுவாசிப்போம், பெற்றுக் கொள்வோம்.

**தேவனுக்கே மகிமை!**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## விருதுநகர் - ராஜபாளையம் யூனியன்
## 100 - கிராம ஊழியம்

**<u>நோக்கம்:</u> 2009 நவம்பர் 16** திங்கள் காலை 9 மணி முதல் **நவம்பர் 20** வெள்ளி இரவு 10 மணி முடிய **விருதுநகர் – ராஜபாளையம் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2009 நவம்பர் 16** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2009 நவம்பர் 20** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2009 நவம்பர் 16 - 20 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**<u>உபவாச ஜெபம் நடைபெறும் இடம்</u>**

**ஷாலோம் அசெம்பிளி சர்ச்,**
**வடக்கு மலையடிப்பட்டி**
**ஆணைக்கல் பின்புறம், மதுரை ரோடு**
**ராஜபாளையம் - 626 117.**
**விருதுநகர் மாவட்டம். போன்: 94864 88546.**

**<u>நன்றி</u>** : உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர்.ஆபிரகாம்** அவர்களுக்கு நன்றி!

**<u>தகுதி</u>** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**<u>பிரயாணப்படி</u>** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**<u>முக்கிய அறிவிப்பு</u>** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**<u>சகல தொடர்புகளுக்கும்</u>** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# தூத்துக்குடி - சாத்தான்குளம் யூனியன்
# 100 - கிராம ஊழிய அறிக்கை
## தேதி : 28.09.2009 முதல் 02.10.2009 முடிய

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 28.09.2009 முதல் 02.10.2009 வரை **தூத்துக்குடி – சாத்தான்குளம் யூனியனில் "100–கிராம ஊழியம்"** மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. முதல் நாள், கடைசி நாள் கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகள் யாவையும் **சாத்தான்குளம் A.G. சபை பாஸ்டர். ஜஸ்டின்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 58 பேர் இதில் கலந்துகொண்டு ஊழியம் செய்தார்கள்.

முதல் நாள் ஜெபத்தில் கிராம ஊழியர்கள் யாவரும் கூடி சாத்தான்குளம் யூனியனில் உள்ள எல்லா கிராமங்களின் பெயர்களையும் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுத்தார்கள். இந்த ஜெபத்தில் சாத்தான்குளம் ஏ.ஜி. சபை பாஸ்டர். ஜஸ்டின் அவர்கள் தேவ செய்தி கொடுத்தார்கள். இதன் பின் கிராம ஊழியர்கள் **58** பேரையும் **11** குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியே கூடி அவரவர் ஊழியம் செய்ய வேண்டிய கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். ஜெபித்தபின் கிராம ஊழியர்களுக்கு ஏ.ஜி. சபையின் சார்பில் சிறப்பான ஆகாரம் வழங்கப்பட்டது. இதன்பின் கிராம ஊழியர்களின் **11** குழுவும் கிராமங்களில் தங்கிக் கொண்டு **5** நாட்கள் வீடுகள் தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், கைப்பிரதிகள் மற்றும் சிலுவைக் கொடிகள் இவைகளை இலவசமாகக் கொடுத்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். மொத்தம் 11057 யோவான் சுவிசேஷங்கள், **20,000 இயேசுவே இரட்சகர்** மற்றும் கைப்பிரதிகள், **10,000** சிலுவைக் கொடிகள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்த ஊழியத்தில் சந்திக்கப்பட்டவர்களில் 75 புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களைக் கொடுத்து வேதபாடங்கள் தபால் மூலம் அனுப்பக் கேட்டுக் கொண்டார்கள்.






5 நாட்கள் ஊழியங்களை முடித்து மீண்டும் முன்பு கூடிய இடத்திலேயே கூடி ஜெபித்து சாட்சி சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த ஜெபத்தில் சென்னையிலிருந்து வந்திருந்த **பாஸ்டர். மாற்கு லூாயிஸ்** அவர்கள் தேவ செய்தி கொடுத்து, ஊழியர்களை உற்சாகப்படுத்தி, ஒவ்வொருவருக்காகவும் ஜெபித்தார்கள். **சகோ. பி.டி. கிறிஸ்டோபர் மற்றும் சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** ஆகியோரும் ஜெபித்து சிறப்பித்தார்கள். முகாமின் சகல வேலைகளையும் பொறுப்புடன் நடத்தித் தந்த சகோ. பன்னீர்செல்வம் அவர்களுக்கு நன்றி. **தேவனுக்கே மகிமை.**

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு:1 சகோதரி டோராலாசர், அமிர்தம், அந்தோணிமேரி, சீலா அம்மாள், ஞானத்தங்கம்**

நாங்கள் கிராமங்களில் வீடு வீடாக சென்று யோவான் சுவிசேஷம் கொடுத்தோம். ஒருவருக்கு இயேசுவைப் பற்றி சொன்ன போது, அவர் எல்லா சாமியும் ஒன்றுதான். நீங்க சொல்லுகிற இயேசு சாமியை நான் கும்பிடுகிறேன். அதே போல நான் சொல்லும் எங்கள் சாமியை நீங்கள் கும்பிடுவீர்களா ? என்று கேட்டார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:2 சகோதரி அன்னக்கிளி, ஜெபமணி, செலின் ஜெயபால், விமலா, மனோரஞ்சிதம்**

விஜயனுார் கிராமத்தில் ஊழியம் செய்த போது தசாவதார நிகழ்ச்சியில் பங்கு கொண்டிருந்த ஒரு முக்கிய பிரமுகர் எங்களை கூப்பிட்டு யோவான் புத்தகம் ஒன்று கேட்டு வாங்கி எங்களைப் பற்றி விசாரித்து விட்டு ரூ 101/– காணிக்கையும் தந்தார். பண்டாரபுரத்தில் ஒருவர் இங்கு யாரும் வரக்கூடாது என்று சொல்லி விரட்டினார். ஆனாலும் நாங்கள் பயப்படாமல் அந்த கிராமம் முழுவதும் யோவான் புத்தகம் கொடுத்து, **இயேசுவே மெய்யான கடவுள்** என்று கூறினோம். மொத்தம் 1125 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:3 சகோ. சூசைமாணிக்கம், ஆரியப்பன், பால்ராஜ், ஜோசப்.**

பண்டாரபுரம் ஊராட்சியில் தஞ்சை நகரம் சிறப்பூர், சாமிதோப்பு, சாலைபுதுார் கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். அநேகர் வாஞ்சையுடன் சுவிசேஷத்தைக் கேட்டார்கள்.சாலைப்புதுாரில் சுவிசேஷம் அறிவிக்க எதிர்ப்பு தெரிவித்தார்கள். இப்பகுதி மக்கள் எங்களைப் பார்த்து உங்களுக்கு அறிவே இல்லையா ? என்று சொல்லித் திட்டினார்கள். ஒருவன் நீங்கள் கொடுக்கிற புத்தகத்தை நாங்கள் வாங்குவது போல நாங்கள் கொடுக்கிற இந்த விபூதி பொட்டலத்தை வாங்குங்கள் என்று சொல்லி வாக்குவாதம் பண்ணினான். நாங்கள் சமாதான வார்த்தைகள் பேசிவிட்டு கடந்து போனோம். மொத்தம் 907 சுவிசேஷப் புத்தகங்கள் மற்றும் 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:4 சகோதரி கஸ்துாரி, மேரிமீனா, மரியாள், அன்னாள், கிருபா பழனியம்மாள்**

புதுக்குளம் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் மக்களை சந்தித்து வீடு வீடாக யோவான் புத்தகம் கொடுத்தோம். யாவரும் வாஞ்சையோடு வாங்கிக் கொண்டார்கள். நாங்கள் கொடுத்த சிலுவைக் கொடிகளை பார்த்து ஒருவர் இதை ஏன் கொடுக்கிறீர்கள் என்று கோபமாக கேட்டார். அவரிடம், ஐயா இதைப் படித்துப் பாருங்கள். நாங்கள் மதமாற்றம் செய்ய வரவில்லை என்றதும் அமைதியாக போய் விட்டார். மொத்தம் 1010 யோவான் புத்தகங்கள், 975 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:5 சகோ. இஸ்ரவேல், யோசுவா, பிரபுதாஸ், பாபு சாலமோன், வசந்த குமார்**

நாங்கள் கிராமங்களில் வீடுவீடாக யோவான் புத்தகம், சிலுவைக் கொடிகள், கைப்பிரதிகள் கொடுத்தோம். யாவரும் ஆர்வமுடன் வாங்கிக் கொண்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:6 பாஸ்டர். ஆல்வின், சகோ.ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம், தாவீது தங்கவேல், சகோதரி ஜோதிமணி, கிரேஸ்பத்மா**

நாங்கள் நொச்சிக்குளம் கிராமத்தில் சென்று சுவிசேஷப் புத்தகம் கொடுத்து ஊழியம் செய்தோம். அப்போது இக்கிராமத்தைச் சேர்ந்த ஆர்.சி. பாதர் மற்றும் சில ஆட்கள் கூடி வந்து எப்படி இங்கிருந்து வந்தீர்கள் யாரிடம் கேட்டு இங்கு வந்தீர்கள். மதம் மாற்ற வந்தீர்களா ? போலீஸைக் கூப்பிடுவோம். கோயில் மணி அடித்து ஊரைக் கூட்டி உதைப்போம் என்றெல்லாம் சொல்லி மிரட்டினார்கள். நாங்கள் அவர்களிடம் நீங்களும் கிறிஸ்தவர்கள் தானே என்று கேட்டதற்கு அதெல்லாம் உங்களுக்கு தேவையில்லை. இப்போதே இங்கிருந்து ஓடிவிடுங்கள். இல்லையென்றால் பெரிய பிரச்சனை ஏற்படும் என்றார்கள். அப்போது நாங்கள் உங்களுக்கு வேண்டாம் என்றால் போய் வருகிறோம். அதற்காக இப்படி எங்களை மிரட்ட வேண்டாம் என்று சொல்லி விட்டு கடந்து வந்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:7 சகோ. சவரிராஜ்,அந்தோணி, இஸ்தாக்கி, ஸ்டீபன்ராஜ், ஜீவானந்தம், சாமுவேல் மாசிலாமணி.**

பழங்குளம், கிருஷ்ணப்பேரி ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து, யோவான் புத்தகங்கள் கொடுத்து கொண்டு வரும்போது, பல வருடங்களாக கைகால் நடக்க முடியாமல் படுக்கையில் கிடந்த ஒருவருக்கு ஜெபித்தோம். அவர் எழுந்து உட்கார்ந்து எங்களோடே பேசினார். கிருஷ்ணப்பேரி கிராமத்தில் வீடுகளில் கொடுத்த அனைத்து புத்தகங்களையும் சிலர் வாங்கி மொத்தமாக சேர்த்து கிழித்துப் போட்டார்கள். இம்மக்களுக்காக ஜெபித்து விட்டு கடந்து போனோம். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 870 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:8 சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், லீதியாள், தேவகிருபை, சலோமி சம்மனசு**

நாங்கள் 10 கிராமங்களுக்கு சென்று வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். எல்லோரும் சந்தோஷமாக வாங்கினார்கள். ஒரு முஸ்லீம் பெரியவர் எங்களிடம் நான் பைபிள் நன்றாக படிக்கிறேன். எனக்காக ஜெபியுங்கள் என்று சொன்னார். முஸ்லீம் மக்கள் அநேகர் சந்தோஷமாக சுவிசேஷப் புத்தகத்தை வாங்கினார்கள். மொத்தம் 920 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:9 சகோதரி மாரியம்மாள், எஸ்தர் பேபி, அபியேல் அந்தோணி, சாந்தி, தேவ பாக்கியம், ரெபேக்காள்**

காலன் குடியிருப்பு, ஆறுமுகநேரி கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். வீடுகள் தோறும் யோவான் புத்தகம் கொடுத்தபோது, யாவரும் சந்தோஷமாக வாங்கினார்கள். ஜெயமேரி என்ற சகோதரிக்கு பிரஸ்ஸர் அதிகமாகி, படுத்த படுக்கையில் கிடந்தாள். நாங்கள் சேர்ந்து அந்தச் சகோதரிக்காக ஜெபித்தோம். உடனே அந்த சகோதரி எழுந்து எங்களுக்கு காபி போட்டுக் கொடுத்து உபசரித்தார்கள். மொத்தம் 1025 சுவிசேஷப் புத்தகங்கள், 925 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:10 சகோதரி எஸ்தர், பிச்சையம்மாள், ஜோதிமணி, ரூத்மேரி, கிளமெண்ட்ஸ்மேரி**

நாங்கள் 10 கிராமங்களில் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். எல்லோரும் ஆர்வமாக வாங்கினார்கள்.

ஒரு அம்மா மட்டும் புத்தகம் வேண்டாம் என்று சொல்லி எங்களிடம் தகராறு செய்தார்கள். வேறு யாரும் எங்களை ஒன்றும் சொல்லவில்லை. ஊழியங்களை ஆசீர்வாதமாக செய்து முடித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:11 சகோ. மாற்கு மாரியப்பன், மகாராஜன், சாமுவேல், கிங்சாலமன்.**

பேய்க்குளம், கீழ பேய்க்குளம், மேல பேய்க்குளம் ஊழியம் செய்த போது ஒரு பெண்ணிடம் ஒரு புத்தகம் கொடுத்தோம். அவள் அதிக கோபத்துடன் அந்த புத்தகத்தை தூக்கி எரிந்து விட்டார். இதே கிராமத்தில் ஒரு வீட்டில் குடிக்க தண்ணீர் கேட்டோம். வீட்டில் தண்ணீர் இல்லை போங்கள் என்று சொல்லி வீட்டை பூட்டினார்கள். அநேக வியாதிக்காரர் களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 975 சுவிசேஷப் புத்தகங்கள், 930 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

## 2009 பத்திரிக்கை சந்தா

இந்த வருடம் காணிக்கையின் மூலமாகவோ அல்லது சந்தா மூலமாகவோ பத்திரிக்கை ஊழியத்தை தாங்கினவர்களுக்கு மட்டும் 2010 ல் **"100 கிராம ஊழியம்"** மாதாந்திர பத்திரிக்கை அனுப்பி வைக்கப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு வேளை உங்களுக்கு பத்திரிக்கை தவறுதலாக நிறுத்தப் பட்டிருந்தால் தயவு செய்து தயங்காமல் தபால் மூலம் முழு விலாசம், போன், ஈமெயில் யாவும் தெரியப்படுத்தி உதவுங்கள்.

## 100- கிராம ஊழியம் பொருளாதார தேவைகளுக்காக ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

**100-கிராம ஊழிய பத்திரிக்கையை வாஞ்சையோடு வாசித்து ஜெபிக்கும் அன்பு சகோதர, சகோதரிகளே!**

ஜெபிப்பது மட்டுமல்லாமல், மாதந்தோறும் ஏதாவது ஒரு யூனியனில் நடைபெறும் 100-கிராம ஊழியத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ உங்கள் குடும்பம் அல்லது சபை சார்பில் பொறுப்பேற்று தேவ ஆசீர்வாதத்தை பெற அன்புடன் அழைக்கிறோம்.

**ஒரு யூனியனில் 100-கிராம ஊழியம் நடத்துவதற்கு ஏற்படும் செலவுகளை உத்தேசமாக எழுதுகிறேன்.**

| | |
|---|---|
| 15,000 யோவான் சுவிசேஷ புத்தக விலை | – ரூ. 15,000 |
| 10,000 சிலுவைக்கொடிகள் | – ரூ. 5,000 |
| 10,000 கைப்பிரதிகள் | – ரூ. 1,000 |
| 50 ஊழியர்களுக்கு பிரயாணப்படி மற்றும் வழிச் செலவு | – ரூ. 25,000 |
| கிராமங்களுக்குள் செல்ல முன்பணம் | – ரூ. 1,500 |
| முகாம் சர்வே பண்ண,நடத்த | – ரூ. 1,000 |
| நோட்டீஸ், ஸ்டாம்பு, போன் | – ரூ. 1,000 |
| நிர்வாக செலவு | – ரூ. 500 |
| | **ரூ. 50,000** |

**குறிப்பு:** இதுபோக முதல் நாள், கடைசி நாள் உணவு, இனிப்பு, பார்சல் செலவு யாவும் முகாம் நடத்தும் சபை போதகர் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள்.

## உங்கள் பங்கு என்ன?

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

### பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

1. **சகோ. சேகர், திருவண்ணாமலை.**

நான் இந்த ஆண்டு கல்லூரியில் அனைத்துப் பாடங்களிலும் 65% மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றேன்.

2. **சகோதரி மல்லிகா, நெல்லை.**

என் கணவருக்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். என் கணவருக்கு தலை சுற்றல் நின்று விட்டது. இன்னும் பல நன்மைகளை இயேசு எங்கள் குடும்பத்தில் செய்துள்ளார்.8

3. **சகோதரி பியூலா, நெல்லை.**

என் மகள் ECE முதலாமாண்டு படித்தவள் படிக்க மாட்டேன் என்று 7 மாதங்களாக வீட்டிலிருந்தாள். தங்களிடம் தொலைபேசியில் ஜெபிக்கக் கேட்டேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, மீண்டுமாக படிக்க சேர்த்து விட கிருபை செய்தார்.

4. **சகோதரி ருக்மணி, திண்டுக்கல்.**

நீங்கள் எனக்கு கர்த்தர் அதிசயமான காரியங்களைச் செய்வார் என்று கடிதம் எழுதியிருந்துர்கள். அதேபோல் என் கணவருக்கு வேலையில் Promotion கிடைத்தது. தேவனுக்கே மகிமை.

5. **சகோதரி லீமா, திருச்சி.**

எனது 5 மாத குழந்தை சுகவீனமாக காணப்பட்டது. நான் 100–கிராம ஊழியத் திற்கு சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.

6. **Rev.மரியலூயிஸ், தர்மபுரி.**

உங்கள் ஜெபம் எங்களை அதிகமாக தாங்குகிறது. மகனுக்கு திருமணம் நன்றாக நடந்தது. 2வது மகன் BTH 3ம் வருடம் முடித்து விட்டான். 3வது மகன் BTH 2ம் வருடத்திற்குள் சென்றிருக் கிறான். தேவனுக்கே மகிமை!

7. **சகோ.பாஸ்கரன், காஞ்சிபுரம்.**

எனது பேத்திக்கு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவ பரிசோத னைக்காக கொண்டு சென்றோம். சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். மருத்துவ பரிசோதனையில் எந்த பாதிப்பும் இல்லையென்று கூறிவிட்டார்கள்.

8. **சகோ. ஆரோக்கியம், பெரம்பலூர்.**

எனது செல்போன் தண்ணீரில் விழுந்து செயல்படவில்லை. ரூ.2000/- போய் விட்டதே என்று கவலைப்பட்டேன். 100–கிராம ஊழியத்திற்கு சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு செல்போனை செயல்பட செய்தார்.

9. **சகோ. எபனேசர், கன்னியாகுமரி.**

எனது மகன் காய்ச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டான். பெற்றோராகிய எங்களுக்கும் சுகமில்லாதிருந்தது. பொருத்தனை செய்து ஜெபித்தோம். கர்த்தர் பூரண சுகத்தைத் தந்தார்.

**அன்பானவர்களே!**

*இவர்களுக்கு அற்புதங்களை செய்த இயேசுகிறிஸ்து உங்களுக்கு செய்ய மாட்டாரா? கட்டாயம் செய்வார்.* **இயேசு கிறிஸ்து பட்சபாதமுள்ள தேவன் அல்ல.** *அவர் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் அற்புதங்களை செய்ய வல்லவர். இன்றே உங்கள் ஜெப விண்ணப்பங்களை எழுதி அனுப்புங்கள். நீங்களும் எங்களோடு இணைந்து ஜெபியுங்கள். இயேசு உங்களையும் சாட்சியாக நிறுத்துவார்.*

# கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலகம் 2009 செப்டம்பர் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் செப்டம்பர் மாத ஊழியங்களை கர்த்தர் அபரிமிதமாக ஆசீர்வதித்தார்.

தரிசன முகாம்களின் மூலமாக கிடைக்கப் பெற்ற ஜெப பங்காளர்களுக்கு ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் ஜெபக் குறிப்புகளை அனுப்புகிறோம். அவர்களது ஜெபங்களே எமது அலுவலக ஊழியத்தின் வளர்ச்சிக்கு காரணமாக உள்ளது.

சுவிசேஷ ஊழியம் செய்த கிராமங்களில் பின்தொடர்பணி செய்யப்பட வேண்டியுள்ளது. அதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறோம். தடைகள் மாற உங்கள் ஜெபங்கள் தேவை.

மேலும் நமது அலுவலக சகோதரிகள் சந்திக்கும் வீடுகளிலிருந்து ஜீவனுள்ள சாட்சிகளை கேட்கவும், ஸ்தோத்திரக் காணிக்கைகள் கிடைக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். அவைகளில் **திரு. தங்கம் ( ஆரல்வாய்மொழி )** அவர்களின் சாட்சியை வாசித்து தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**சாட்சி:** என் மகன் சுவாமிநாதனுக்கு அதிக நாட்களாக திருமணம் தடைபட்டுக் கொண்டேயிருந்தது. மகனுக்கு திருமணம் நடக்க TVGM அறிமுகப்பணி அலுவலக சகோதரிகள் அதிகமாக ஜெபித்தார்கள். நானும் கர்த்தர் அற்புதம் செய்ததும் "100–கிராம ஊழியம்" பத்திரிக்கையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு செப்டம்பர் 7ம் தேதி மகனின் திருமணத்தை ஆசீர்வாதமாக நடத்தினார். **தேவனுக்கே மகிமை!**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! தொடர்ந்து TVGM அறிமுகப்பணி ஊழியங்களுக்காக ஜெபிக்கும்படி உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001 செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

# TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

## நடு இரவு ஜெபம் - மறு நாள் துதி ஆராதனை

**நாள் : 31.10.2009** சனி
**நேரம் :** 7PM-12Mid Night
**இராப்போஜனம் :** இரவு 12மணி

**நாள் : 01.11.2009** ஞாயிறு
**துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM
**வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM

## நடைபெறும் இடம்

**TVGM தலைமை அலுவலகம்**
**100 – கிராமம்,**
**சோமரசம் பேட்டை ( ஆஸ்பத்திரி ஸ்டாப் ) திருச்சி.**

# தூத்துக்குடி மாவட்டம் - முதலூர் பகுதியை சுற்றியுள்ள கிராமங்களில் விசேஷ சுவிசேஷப்பணி.

## தேதி : 2009 செப்டம்பர் 7 திங்கள் - 12 சனி

### ஊழிய அறிக்கை


8 கிராம ஊழியர்கள்

கர்த்தருடைய கிருபையால் தூத்துக்குடி மாவட்டம் – சாத்தான் குளம் யூனியனிலுள்ள முதலூர் மற்றும் இவ்வூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் 07.09.2009 திங்கள் முதல் 12.09.2009 சனி வரை “**100** கிராம உழியம்” ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசிநாள், கூடுமிடம், உணவு, இனிப்பு இவைகளை கோயம்புத்தூர் சித்ரா ஏ.ஜி. சபை. **பாஸ்டர். V. டேனியல்** அவர்கள் மூலம் முதலூர் ஏ.ஜி. சபை **பாஸ்டர். ரவிக்குமார்** அவர்கள் கொடுத்து உதவி செய்தார்கள். இந்த ஊழியத்திற்கு தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 8 பேர் மட்டும் வந்து கலந்து கொண்டு ஊழியம் செய்தார்கள்.

முதல் நாள் ஜெபத்தில் முதலுரைச் சுற்றியுள்ள 60 கிராமங்களின் பெயர்களை வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் **பாஸ்டர். ரவிக்குமார்** தேவ செய்தி கொடுத்தார்கள். பின்பு கிராம ஊழியர்களை இரண்டு குழுக்களாக பிரித்து, அவரவர் செல்ல வேண்டிய கிராமங்களின் பெயர்களை வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுத்தார்கள். மதிய உணவிற்குப் பிறகு அவரவர் செல்ல வேண்டிய கிராமங்களுக்குச் சென்று அங்கேயே தங்கிக்கொண்டு 5 நாட்கள் கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு **வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்** இலவசமாக கொடுத்து இயேசுவே ஆண்டவர் என்று சொல்லி ஊழியம் செய்தார்கள். மொத்தம் 2000 சுவிசேஷப் புத்தகங்கள், 2000 **இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள்,** 1000 சிலுவைக் கொடிகள் வழங்கப்பட்டன.


சுவிசேஷம் அறிவித்தல்


பாஸ்டர் டேனியல்


சகோ.எட்வின் பொன்னையா

கடைசிநாள் ஜெபத்தில் கிராம ஊழியர்கள் சாட்சிக் கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த ஜெபத்தில் கோயம்புத்தூர் சித்ரா ஏ.ஜி. சபை **பாஸ்டர். டேனியல்** தேவ செய்தி கொடுத்தார்கள். சகோ.எட்வின் பொன்னையா சாட்சியளித்தார்கள். TVGM ஸ்தாபகர் **சகோ. P.T. கிறிஸ்டோபர்** கலந்து கொண்டு ஜெபித்து கிராம ஊழியர்களை உற்சாகப் படுத்தினார்கள். இந்த ஊழியத்தின் மூலம் சந்திக்கப்பட்ட 38 புறமத நண்பர்கள் தங்களுடைய விலாசங்களைக் கொடுத்து வேதபாடங்களை தபால் மூலம் அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள்.

முதலூரில் 2009 செப்டம்பர் 11,12,13 ஆகிய நாட்களில் **"இறையன்பு பெருவிழா"** நடைபெற்றது. இதில் Rev. P.S. ராஜாமணி, Rev. சார்லஸ் ஆரோன், Bro. நெல்லை ஜெபராஜ் ஆகியோர் கலந்து கொண்டு தேவசெய்தி கொடுத்தார்கள். இதில் நமது கிராம ஊழியர்கள் 8 பேரும் பங்கெடுத்து கூட்டங்களுக்காக உதவிகள் செய்தார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள் இதோ . . .

நாங்கள் கர்த்தருடைய கிருபையால் எங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த கிராமங்களுக்கு சென்று வீடுகள் தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து **இயேசுவே கர்த்தர்** என்று அறிவித்தோம். யாவரும் அன்புடன் வாங்கிக்கொண்டு சத்தியத்தைக் கேட்டார்கள். அநேக வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். இசக்கியம்மாள், நாச்சியார் இவர்கள் தங்களுடைய கால்கள் நடக்க முடியாதபடி மரத்துப் போய் உள்ளது என்று சுகம் கிடைக்க ஜெபிக்கச் சொன்னார்கள்.

இயேசு நன்மை செய்வார் என்று ஒரு அம்மாவிடம் சொன்ன போது அவர்கள் எங்கள் கடவுளும் நன்மை செய்கிறார் அதுபோதும் இயேசு வேண்டாம் என்று சொன்னார்கள். இன்னொருவர் எங்க சாமியைப் பற்றி உங்களிடம் சொன்னால் கேட்பீர்களா ? நாங்கள் தருகிற புத்தகத்தை வாங்கி படிப்பீர்களா ? என்று கேட்டார். அதற்கு நாங்களும் உங்களைப் போல ஒரு காலத்தில் அறியாதவர்களாக இருந்தோம். இப்போது இயேசுவே மெய்யான கடவுள் என்று ஏற்றுக் கொண்டு சமாதானத்தோடு இருக்கிறோம் என்று சொன்னோம். ஒரு சிலர் மற்றும் சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். மற்றவர்கள் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொண்டார்கள்.

**துதி, கனம், மகிமை இயேசுகிறிஸ்து ஒருவருக்கே!**

**TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள், 100-கிராம ஊழியர்கள், அறிமுகப் பணி மற்றும் அலுவலக சகோதர, சகோதரிகள், TVGM நிர்வாக கமிட்டியினர் உங்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை பின்வருமாறு கொண்டு வருகிறார்கள்.**

**"ஒவ்வொரு வருடமும் உங்கள் ஜெபத்தாலும், பொருளுதவியினாலும் கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகளை சிறப்பாக கொண்டாடி வருகிறோம். கடந்த ஆண்டு நீங்கள் செய்த உதவிகளை எங்களால் மறக்க முடியவில்லை"**

**நன்றி . . நன்றி . . நன்றி ! தேவனுக்கே மகிமை!**

***We wish you a Happy Christmas***

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** 2009 ஆம் ஆண்டு கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட 18 ஜெபவீடுகளுக்காக தேவாதி தேவனை துதியுங்கள். இன்னும் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டிய காவூர் ஆலயக் கட்டுமானப் பணிகள் சீக்கிரம் முடிவடைந்து பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள். விராச்சிலை, குருவக்குளம் போன்ற இடங்களில் ஜெபவீடு கட்டப்பட்டு முடிக்கப்பட்டும் R.S.S. தலையீடுகளால் பிரதிஷ்டை செய்ய முடியவில்லை. கர்த்தருடைய சித்தம் நிறைவேற ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** 2010 ஆம் ஆண்டு ஜெபவீடு கட்டுமானப் பணிப் பற்றி தேவன் தெளிவாக வழிநடத்தும்படி ஜெபியுங்கள். உத்தேசமாக 50 பேர் ஜெபவீடு கட்ட விண்ணப்பம் செய்தும் நாங்கள் ஒருசில வற்றை நேரடியாக பார்வையிட்டும் எந்த விதமான பொருளாதார உதவியும் அந்த ஜெபவீடுகளுக்கு கிடைக்காததால் எந்த உதவியும் செய்ய முடியவில்லை. தேவ சித்தம் நிறைவேற ஜெபியுங்கள்.

**புதன்:** டி.வி.ஜி.எம் தலைமையிடத்தில் கட்டப்பட்டுள்ள சிறுவர் இல்லத்திற்காக தேவாதி தேவனை துதியுங்கள். மூன்றில் ஒரு பகுதி சிறப்பாக கட்டி முடிக்க உதவி செய்த தேவாதி தேவனை துதியுங்கள். குறிப்பாக சிறுவர் இல்ல கூடுதல் கட்டட பணியில் ஏற்பட்டுள்ள கடன் ரூ 3லட்சத்தை தமக்கு சித்தமானவர்கள் மூலம் கர்த்தர் கிருபையாக சந்திக்க ஜெபியுங்கள். இதுவரை நடத்தின தேவன் நிச்சயமாக தேவைகளை சந்திப்பார்.

**வியாழன்:** ஒரிசாவில் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ சபை போதகர்களுக்கும், விசுவாசிகளுக்கும் சிறு சிறு உதவிகள் செய்யவும் ஆலயங்கள் கட்டவும் இடங்களை பார்வையிடவும் வாஞ்சிக் கிறோம். ஆனாலும் நேரம் இல்லாததால் வட இந்திய ஊழியப் பயணம் தாமதமாகிக் கொண்டே இருக்கிறது. கர்த்தர் தெளிவாக கிருபையாக வழிநடத்த ஜெபியுங்கள்.

**வெள்ளி:** இதை போலவே ஒருமுறை இலங்கை தேசத்தில் வவுனியா பகுதியை பார்வையிடவும் சிறு உதவி செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார் மீண்டும் செல்வதற்கு வாஞ்சிக்கிறோம். தேவசித்தம் நிறைவேற ஜெபியுங்கள்.

**சனி:** 100 கிராம ஊழியத்திற்காக ஐ.பி.எல் ஸ்தாபனத்தில் சென்னையில் வாங்கப்பட்ட 2 லட்சம் யோவான் சுவிசேஷ புத்தகத்திற்குரிய பணம் ரூ 2 லட்சம் உத்தேசமாக கொடுக்க வேண்டியதுள்ளது நம்மேல் அன்பு வைத்து சுவிசேஷ புத்தகம் கேட்கும் போதெல்லாம் தயங்காமல் தந்து உதவி செய்யும் சகோ. வேலாயுதம் ஐ.பி.எல் அட்மினிஸ்ரேட்டர் அவர்களுக்காக தேவாதி தேவனை துதியுங்கள்.

**ஞாயிறு :** டி.வி.ஜி.எம் ஊழியத்திற்கு நல்ல அனுபவமுள்ள ஆத்தும பாரமுள்ள அலுவலக சேவையாளர்களை கர்த்தர் கிருபையாக கட்டளையிட கருத்தாய் ஜெபியுங்கள்.

## திருச்சி – TVGM சிறுவர் இல்லம்





2009 செப்டம்பர் மாதத்தில் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு விருந்தளித்த சகோ. மாணிக்கம் ( 26வது திருமணநாள் ), சகோதரி ஜெயவேணி ( பிறந்தநாள் ) சகோ. ராஜேந்திரன் ( திருமணநாள் ), ஆடிட்டர் ஜான் ராஜசேகரன் ( மகளுடைய படிப்பின் வெற்றி), சகோ.ஆரோக்கியராஜ் (ஷீலா ரமேஷ் பிறந்தநாள் ), சகோ.ராஜ்குமார் (மகன் ஸ்டீவ் பிறந்த நாள் ), பாஸ்டர் ஜான்சன் ( ஊழியம் தொடங்கி 13 வருட நிறைவு ) ஆகியோருக்கு நன்றி. **கர்த்தர் இவர்களை ஆசீர்வதிப்பாராக!**

## இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை

கர்த்தருடைய கிருபையினால் மதுரை மாவட்டம் – உசிலம்பட்டி யூனியனில் 12.09.2009 அன்று அங்குள்ள மாரநாதா சபையில் **இயேசுவை விரும்புவோர் முகாம்** நடைபெற்றது. TVGMலிருந்து அழைப்புக் கடிதம் பெற்றுக்கொண்ட வர்களில் 9பேர் மட்டும் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டனர்.

மாரநாதா சபையின் **பாஸ்டர் இம்மானுவேல்** அவர்கள் இயேசுவைப் பற்றிச் சொல்லி, கிறிஸ்துவுக்குள் உற்சாகப்படுத்தினார்கள். யாவரும் சபை ஆராதனையில் கலந்துகொள்வதாக சொன்னார்கள். **தேவனுக்கே மகிமை!**

## 2009 நவம்பர் மாத இயேசுவை விரும்புவோம் முகாம்

**மாவட்டம் :** தஞ்சாவூர்
**யூனியன் :** திருவிடைமருதூர்
**நாள் :** 28.11.2009 சனிக்கிழமை
**நேரம் :** காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் சோலைதாஸ்**
**பெரேயா ஜெபவீடு**
**ராஜா பில்டிங், தரங்கை ரோடு,**
**தேங்காய் மண்டி எதிர்புறம்,**
**ஆடுதுறை – 612 101.**
**தஞ்சாவூர் மாவட்டம்.**
செல் : **9486303008**

## தேவப் பணிக்கு ஆட்கள் தேவை!

+2 முடித்து விட்டு மேற்படிப்பு மற்றும் வேலைக்காக காத்திருக்கும் நாட்களில் கர்த்தருக்காக சேவை செய்ய விரும்புபவர்கள் அல்லது கர்த்தருக்காகவே சேவை செய்ய தங்களை முழுவதுமாக அர்ப்பணித்த தேவபிள்ளைகள் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

1. தமிழ் / ஆங்கிலம் கம்பியூட்டர் 2. வார்டன்.
3. அக்கவுண்ட்ஸ் 4. கார் டிரைவர், 5. சமையல்

**தொடர்புக்கு :** திருச்சி
செல் : 94871 92763
போன் : 0431 - 2607241.

**இலங்கை நீர்க்கொழும்பு –**



**EMMAUS GOSPEL TEAM**

தலைவர் **பாஸ்டர் தர்மபாலா** அவர்கள் குழுவினருடன் TVGM ஸ்தாபகர் சகோ. **P.T.** கிறிஸ்டோபர். **EGT** மூலம் செய்யப்பட்டு வரும் கைப்பிரதி ஊழியங்கள், தனித்தாள் ஊழியம், சபை ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள்.

**தொடர்புக்கு**

**00 - 94 -312228873**



**இலங்கை ஹட்டன் SLVGM**

சிறுவர் இல்லத்தை சகோ. P.T.கிறிஸ்டோபர் நேரடியாக பார்வையிடவும் சிறுவர் இல்லப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் விரும்புகிற ஒரு நேர உணவு பொருட்களை வாங்கி கொடுக்க உதவ கர்த்தர் கிருபை செய்தார். **சகோதரி டப்னி ஐசாயாவை** சந்திக்கவும், ஜெபிக்கவும், ஐக்கியம் சொள்ளவும் கர்த்தர் கிருபை செய்தார்.

## கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக் எடுத்து அனுப்ப வேண்டிய முறை

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)

**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)

**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து

**MR. STEPHEN CHRISTOPHER, SB 12491010 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**

**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**

**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம் நீங்கள் காணிக்கை அனுப்பியுள்ள விபரத்தை தெரியப்படுத்துங்கள்.**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

**Return Request**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

POSTAL REGISTRATION NUMBER : TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.





இந்த மாத பத்திரிக்கை உங்கள் கரங்களில் கிடைக்கும்போது, கர்த்தருடைய கிருபையினால் திருச்சி **TVGM சிறுவர் இல்லம்** 21.10.2009 அன்று மூன்றிலொரு பகுதி ( முன்பக்கம் ) கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்குமென நம்புகிறோம்.
**ஜெபித்த யாவருக்கும் நன்றி!**

## TVGM <u>தலைமை அலுவலக முகவரி</u>

**100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் ) பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம்&சகல தொடர்புகளுக்கும்:-**

MR.STEPHEN CHRISTOPHER, DIRECTOR.
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
"100 - VILLAGE"
SOMARASAMPETTAI,
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0- 431 - 2607241
FAX : 0- 431 - 2607446
CELL : 94871 92763
94435 44628
Email : 100village@tvgm.org

*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம், செய்தி **'100 கிராம ஊழியம்'** அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി हन्ड्रेड विलेज मिनिस्ट्री